TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074797

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District / மாவட்டம் : நாகப்பட்டினம் PS / காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம் Year / ஆண்டு : 2021 FIR No. / மு.த.அ. எண் : 11/2021 Date / நாள் : 30.10.2021

2. (i) Act சட்டம்: Cr.P.C. Sections பிரிவுகள்: 102 Cr.P.C. and
(ii) Act சட்டம்: P.C. Act 1988 as amended by PC(A) Act 2018 Sections பிரிவுகள்: 7, 7-A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 29.10.2021 Date from : நாள் முதல் 17.00 hrs Date to : நாள் வரை 23.30 Hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2021 Time : நேரம் 03.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.10.2021 Time : நேரம் 03.00 Hrs

4. Type of Information : Written / Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 கி.மீ. வடக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.R.ராமச்சந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராமசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 54/2021 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) திரு.K.வெங்கடகிருஷ்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம், (2) திரு.S.மூர்த்தி, அலுவலக உதவியாளர் / பதிவுறு எழுத்தர் (பொறுப்பு), வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் (3) திரு.D.நாகராஜன், வாகன ஓட்டுநர், வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம். (4) நாகப்பட்டினம் JKR Driving School-ல் பணிபுரியும் திரு.M.அருணாச்சலம், S/o. மோகன், (5) நாகப்பட்டினம் கணபதி Driving School-ல் பணிபுரியும் திரு.A.சுந்தரவேல் S/o. அப்பாவு.

8. Reasons for delay in reporting by the complainant / informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— இல்லை —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது இன்று 30.10.2021 ஆம் தேதி காலை 03.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் G.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.R.ராமச்சந்திரன் அவர்கள் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், R.ராமச்சந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 29.10.2021 ஆம் தேதி 17.00 மணி முதல் 23.30 மணி வரை நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.K.வெங்கடகிருஷ்ணன் அவர்களின் சொந்த உபயோகத்திற்காக பயணம் மேற்கொண்ட TN32 AP4759 Suzuki Breeza என்ற கார் ஆகியவற்றை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது திரு.K.வெங்கடகிருஷ்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் என்பவரின் TN32 AP4759 Suzuki Breeza என்ற வாகனத்திலிருந்து சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் முலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள பணம் ரூபாய் 12,000/- இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும்
(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
R. [signature] 30/10/21

[signature] 30.10.21
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.10.2021

Name: பெயர் G.RAMESH KUMAR
Rank: நிலை Inspector of Police, ……… No. எண் ………
Vigilance & Anti-Corruption
Nagapattinam.

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-**

நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி திடீர் சோதனையின்போது திரு.S.மூர்த்தி, அலுவலக உதவியாளர்/ பதிவறை எழுத்தர்(பொறுப்பு), வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 2,700/- இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி திடீர் சோதனையின்போது திரு.S.மூர்த்தி, அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர் பொறுப்பிலிருந்த வட்டார போக்குவரத்து அலுவலக பதிவறையிலிருந்து ரூபாய் 14,000/- மற்றும் பணகுறிப்புகள் எழுதப்பட்ட 7 துண்டு சீட்டுகள் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி திடீர் சோதனையின்போது திரு.D.நாகராஜன், வாகன ஓட்டுநர், வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து ரூபாய் 5,100/-ம், நாகப்பட்டினம் JKR Driving School-ல் பணிபுரியும் திரு.M.அருண்பிரசாத், த/பெ.மோகன் என்பவரிடமிருந்து ரூபாய் 3,500/-ம் மற்றும் நாகப்பட்டினம் கணபதி Driving School-ல் பணிபுரியும் திரு.A.சுந்தரவேல், த/பெ.ஆறுமுகம் என்பவரிடமிருந்து ரூபாய் 14,400/-ம் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் சரியான முகாந்திரம் கூறாததால் குற்றமுறு நடவடிக்கையில் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த மற்றும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது மகஜரில் கண்டபடி நாகப்பட்டினம் ஓட்டுநர் பயிற்சிபள்ளி உரிமையாளர்களிடமிருந்து குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த மற்றும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையிலும், வட்டார போக்குவரத்து அலுவலக பணக்கையிருப்புப் பதிவேடு மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக வெளிநபர் அலுவலகத்திற்கு வருகைப்புரியும் விபரப்பதிவேடு ஆகியவற்றில் அலுவலர்கள் மற்றும் வெளிநபர்கள் வருகை மற்றும் கையிறுப்பு பணம் குறித்து பதிவு மேற்கொள்ளததாலும், மேற்கண்ட விபரப்படியான மொத்தம் **ரூபாய். 51,700/-,** வசூல் செய்த பணம் குறித்த வகைபாட்டுடன் குறிப்புகள் எழுதிய **7 துண்டு சீட்டுகள்** மற்றும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக **6 பதிவேடுகள்** மற்றும் 1)திரு.K.வெங்கடகிருஷ்ணன், வயது.59/2021, த/பெ.கண்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் மற்றும் 2)திரு.S.மூர்த்தி, வயது.42/2021, த/பெ.சட்டையப்பன், அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர், வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி **1)**திரு.K.வெங்கடகிருஷ்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம், **2)**திரு.S.மூர்த்தி, அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர்(பொறுப்பு), வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம், **3)**திரு.D.நாகராஜன், வாகன ஓட்டுநர், வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம், **4)**நாகப்பட்டினம் JKR Driving School-ல் பணிபுரியும்

திரு.M.அருண்பிரசாத், த/பெ.மோகன் மற்றும் 5)நாகப்பட்டினம் கணபதி Driving School-ல் பணிபுரியும் திரு.A.சுந்தரவேல், த/பெ.ஆறுமுகம் ஆகியோர்களின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) Sd.xxx 30/10/21 **(R.ராமச்சந்திரன்),** மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் இன்று 29.10.2021 ஆம் தேதி மாலை சுமார் 17.00 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்குபால்பண்ணைச்சேரியில் உள்ள நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை திரு.R.ராமச்சந்திரன், வயது.54/2021, த/பெ.ராமசாமி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.G.ரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.R.ராமச்சந்திரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்கு பால்பண்ணைச்சேரியில் கிழக்கு மேற்காக செல்லும் சாமந்தான்பேட்டை ரோட்டின் வடக்கு பக்கம் உள்ள நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் திரு.மூர்த்தி மற்றும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் ஓட்டுநர் பயிற்சிபள்ளிகளின் உரிமையாளர்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், அலுவலக உதவியாளர் திரு.மூர்த்தி அவர்கள் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அலுவலகத்திற்கு வெளியே வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கையூட்டு பணத்தை கொடுப்பதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 29.10.2021 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய என்னிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் R.ராமச்சந்திரன் ஆகிய நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 15.30 மணிக்கு வந்தும், அங்கிருந்து திரு.G.ரமேஷ் குமார், காவல் ஆய்வாளர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் சகிதம் இரண்டு அரசு வாகனங்களில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 29.10.2021 ஆம் தேதி 16.00 மணிக்கு புறப்பட்டு, நாகப்பட்டினம் புத்தூர் ரவுண்டான அருகே வந்து நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர் சென்ற TN32 AP4759 Suzuki Breeza என்ற வாகனத்தை மறித்து, அந்த வாகனத்திலிருந்த நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.K.வெங்கடகிருஷ்ணன் அவர்களிடம் திடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து அவரை அவரது வண்டியிலேயே அழைத்துக்கொண்டு, நாகப்பட்டினம் வாட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு 17.30 மணிக்கு வந்து, நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த அலுவலர்களிடம் திடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் வட்டார

போக்குவரத்து அலுவலகமானது, நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்குபால்பண்ணைச்சேரியில் கிழக்கு மேற்காக செல்லும் சாமந்தான்பேட்டை ரோட்டின் வடக்கு பக்கம் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகம் உள்ளது. மேற்படி அலுவலகத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு பக்கத்தில் காலிஇடங்கள் உள்ளது. மேற்படி அலுவலகத்தின் முன்புறம் ஒரு போர்டிகோவும், மேற்படி அலுவலகத்தின் நுழைவு வாயிலை அடுத்து ஒரு பெரிய ஹாலும், மேற்படி ஹாலுக்கு வடக்கே வட்டார போக்குவரத்து அலுவலர் அறையும், மேற்படி ஹாலுக்கு மேற்கே கண்ணாடி தடுப்புடன் கூடிய PA to RTO அவர்களது அறையும், அதனை அடுத்து அலுவலர்கள் அமரும் அறை மேஜைகள் மற்றும் நாற்காலிகளுடன் அமைந்துள்ளது. மேற்படி ஹாலின் மேற்கே கண்ணாடி தடுப்புடன் கூடிய அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் இருக்கை வடக்குபார்த்தும், மேற்படி ஹாலின் வடக்கே ஒரு மூன்றாவது ஹாலும், அதில் கிழக்கு பக்கம் அடுக்கி வைக்கப்பட்ட பதிவேடுகளும், அதனையடுத்து கழிவறைகளும் உள்ளது. மேற்படி மெயின் ஹாலின் கிழக்கே மையத்தில் மாடிபடிக்கட்டுகளும், அதனையடுத்து கண்ணாடி தடுப்புக்கு அடுத்து அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர் திரு.S.மூர்த்தி என்பவரது மேஜையுடன் கூடிய இருக்கையும், மேற்படி அறைக்கு வடக்குபக்கம் Smart Card அறையும், அதற்கு கிழக்கே பார்வையாளர்கள் அமரும் இடமுமாக வட்டார போக்குவரத்து அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்தில் படிக்கட்டின் எதிர்புறம் பதிவறையும், மேற்குபக்கம் ஒரு ஹாலும், அந்த ஹாலினை அடுத்து பதிவேடுகள் வைக்கப்பட்டுள்ள அறையும், மேற்படி ஹாலுக்கு வடக்கு பக்கம் கூட்ட அறையும் உள்ளது. தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி அலுவலகத்தில் இருந்தவர்கள் அவரவர் இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் **1)**திரு.K.வெங்கடகிருஷ்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர், **2)**திரு.T.செந்தில்குமார், இளநிலை உதவியாளர், **3)**செல்வி.R.ராஜேஸ்வரி, தட்டச்சர், **4)**செல்வி.M.ஜெயஸ்ரீ, Data Entry Operator, **5)**திரு.K.சிவக்குமார், Data Entry Operator, **6)**திரு.D.நாகராஜன், வாகன ஓட்டுநர், **7)**திரு.M.கோபிநாத், த/பெ.முருகேசன், Samy Driving School, நாகப்பட்டினம், **8)**திரு.M.அருண்பிரசாத், த/பெ.மோகன், JKR Driving School, நாகப்பட்டினம், **9)**திரு.M.ராமமூர்த்தி, த/பெ.மணி, ஏசு Driving School, நாகப்பட்டினம், **10)**திரு.K.சபாபதி, த/பெ.கிருஷ்ணன், ஏசு Driving School, நாகப்பட்டினம், **11)**திரு.A.சுந்தரவேல், த/பெ.ஆறுமுகம், கணபதி Driving School, கருவேலங்கடை, நாகப்பட்டினம் ஆகியோர் இருந்தனர். நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர்களிடம் அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர்(பொறுப்பு) திரு.S.மூர்த்தி எங்கே என்று கேட்டபோது, திரு.S.மூர்த்தி என்பவர் நாகப்பட்டினம் State Bank ATM

சென்றிருப்பதாக தகவல் தெரிவித்ததன் அடிப்படையில், நாகப்பட்டினம் விஜிலென்ஸ் காவலரை அனுப்பி நாகப்பட்டினம் State Bank ATM அருகில் நின்று கொண்டிருந்த மேற்படி அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர் திரு.S.மூர்த்தி என்பவரை நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள பதிவறை அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர் திரு.S.மூர்த்தி என்பவரால் பூட்டப்பட்டு, அதன் சாவி அவர்வசம் இருந்தது. விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் TN 51 AG 6666 என்ற அரசு வாகனம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் சென்ற வாகனம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தையும் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் சரியான முகாந்திரம் கூறிய தொகை அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலும், மேலும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலருக்காக அவரது அலுவலக உதவியாளரின் மூலமாக நாகப்பட்டினம் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர்களிடம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் மற்றும் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளியினர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.51,700/-ம்** திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|
| 1 | திரு.K.வெங்கடகிருஷ்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் மற்றும் அவரது வாகனம் TN32 AP 4759 என்ற வாகனத்திலிருந்து கைப்பற்றப்பட்டது | 1950 | 12,000 |
| 2 | திரு.S.மூர்த்தி, அலுவலக உதவியாளர்/ பதிவறை எழுத்தர் | 250 | 2,700 |
| 3 | திரு.S.மூர்த்தி, அலுவலக உதவியாளர்/ பதிவறை எழுத்தர் பொறுப்பிலிருந்த வட்டார போக்குவரத்து அலுவலக பதிவறையிலிருந்து கைப்பற்றப்பட்டது | - | 14,000 |
| 4 | திரு.T.செந்தில்குமார், இளநிலை உதவியாளர் | 600 | - |
| 5 | செல்வி.R.ராஜேஸ்வரி, தட்டச்சர் | 100 | - |
| 6 | செல்வி.M.ஜெயஸ்ரீ, Data Entry Operator | 300 | - |
| 7 | திரு.K.சிவக்குமார், Data Entry Operator, | 100 | - |
| 8 | திரு.D.நாகராஜன், வாகன ஓட்டுநர் | 480 | 5,100 |
| 9 | திரு.M.கோபிநாத், த/பெ.முருகேசன், Samy Driving School | 120 | - |

| | | | |
|---|---|---|---|
| 10 | திரு.M.அருண்பிரசாத், JK Driving School | - | 3,500 |
| 11 | திரு.M.ராமமூர்த்தி, ஏசு Driving School | 100 | - |
| 12 | திரு.K.சபாபதி, ஏசு Driving School, | 30 | - |
| 13 | திரு.A.சுந்தரவேல், த/பெ.ஆறுமுகம், கணபதி Driving School | - | 14,400 |
| 14 | திரு.J.ஆரோக்கிய கிரிஸ்டி, த/பெ.ஜோசப், TN32 AP 4759 வாகன ஓட்டுநர். | 120 | - |
| 15 | SBI ATM-ல் RTO சொல்லி திரு.G.பிரபு என்பரின் SBI வங்கி கணக்கு எண் 20388959056-ல் லஞ்ச பணம் ரூபாய் **30,000/-** Deposit செய்யப்பட்ட வங்கி ATM ரசீது கைப்பற்றப்பட்டது | - | - |
| | | **4,150** | **51,700** |

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அந்த பணத்திற்குண்டான சரியான முகாந்திரம் தெரிவித்ததாலும், அவர்கள் வைத்திருந்த பணம் பற்றி பணம் கையிருப்பு பதிவேடு-2021ன்படி சரியாக இருந்ததாலும் அந்த பணம் ரூபாய் 4,150/- அவரவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.51,700/-ம்** மற்றும் SBI ATM -ல் RTO சொல்லி திரு.G.பிரபு என்பரின் SBI வங்கி கணக்கு எண் 20388959056-ல் அலுவலக உதவியாளர் திரு.மூர்த்தி வசூலித்த லஞ்ச பணத்திலிருந்த ரூபாய் 30,000/-த்தை இன்று 29.10.2021 ஆம் தேதி 17.04 மணிக்கு Deposit செய்த TXN No.2449-க்கான ரசீது திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது திரு.K.வெங்கடகிருஷ்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் என்பவரின் சட்டை மற்றும் பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூபாய் 1,950/- மற்றும் அவரது TN32 AP 4759 என்ற வாகனத்தின் RTO அமர்ந்திருந்த இருக்கையின் பின்புறமுள்ள சீட்டு கவரிலிருந்து ரூபாய் 12,000/-ம் **மொத்தம் ரூபாய் 13,950/-** இருந்ததில், அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் **ரூபாய் 1,950/-** திரு.K.வெங்கடகிருஷ்ணன் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. வாகனத்திலிருந்து எடுக்கப்பட்ட பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறாததால் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் மேற்படி ரூபாய் **12,000/-** கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது திரு.S.மூர்த்தி, அலுவலக உதவியாளர்/ பதிவறை எழுத்தர் என்பவரின் பர்ஸிலிருந்து ரூபாய் 250 மற்றும் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 2,700 **மொத்தம் ரூபாய் 2,950/-** இருந்ததில், அவர் சரியான முகாந்திரம் கூறிய பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த

சொந்தப்பணம் **ரூபாய் 250/-** அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் **2,700/-** கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.S.மூர்த்தி அவர்களை சோதனை செய்ததில் அவரிடம் இன்று 29.10.2021 ஆம் தேதி 17.04 மணிக்கு State Bank of India ATM-ல் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.வெங்கடகிருஷ்ணன் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய வாராந்திர கையூட்டு பணம் ரூபாய் 30,000/-த்தை அவரது நண்பர் திரு.G.பிரபு என்பரின் SBI வங்கி கணக்கு எண் 20388959056 என்ற எண்ணிற்கு Deposit செய்ததற்கான ரசீது இருந்தது. திடீர் ஆய்வின்போது அலுவலகத்தை சோதனை செய்ததில் திரு.S.மூர்த்தி, அலுவலக உதவியாளர்/ பதிவறை எழுத்தர் பொறுப்பிலிருந்த வட்டார போக்குவரத்து அலுவலக பதிவறையிலிருந்து ரூபாய் 14,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பதிவறை பூட்டப்பட்டிருந்த நிலையில் திரு.S.மூர்த்தி அவர்களிடமிருந்த மேற்படி பதிவறையின் சாவியை பெற்று மேற்படி அறையினை திறந்து சோதனை செய்ததில் அலுவலக பதிவேடுகளுக்கு இடையில் ரூபாய் 14,000/- பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் ரூபாய் 14,000/- த்துடன் பணக்குறிப்புகள் எழுதப்பட்ட 7 துண்டு காகிதங்களும் கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது திரு.D.நாகராஜன், வாகன ஓட்டுநா என்பவரின் பர்ஸிலிருந்து ரூபாய் 480 மற்றும் அவரது சட்டை மற்றும் பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூபாய் 5,100/- ஆக **மொத்தம் ரூபாய் 5,580/-** இருந்ததில், அவர் சரியான முகாந்திரம் கூறிய பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த சொந்தப்பணம் **ரூபாய் 480/-** அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. சட்டை மற்றும் பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் **5,100/-** கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது அலுவலகத்திலிருந்த திரு.M.அருண்பிரசாத், த/பெ.மோகன், JKR Driving School, நாகப்பட்டினம் என்பவரிடம் ரூபாய் 3,500/- மற்றும் திரு.A.சுந்தரவேல், த/பெ.ஆறுமுகம், கணபதி Driving School, கருவேலங்கடை, நாகப்பட்டினம் என்பவரிடம் ரூபாய் 14,400/- இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறாததால் குற்றமுறு நடவடிக்கைக்கு நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக ஊழியர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்பதன் அடிப்படையில் மேற்படி ரூபாய் **17,900/-** கைப்பற்றப்பட்டது. சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற மற்றும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்றும் மேலும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக உதவியாளரின் மூலமாக நாகப்பட்டினம் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர்களிடம் கையூட்டாக கேட்டு பெற்று வைக்கப்பட்டிருந்த பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.51,700/-** மற்றும் **1)**திரு.S.மூர்த்தி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 29.10.2021 ஆம் தேதி

17.04 மணிக்கு State Bank of India ATM-ல் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.வெங்கடகிருஷ்ணன் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய வாராந்திர கையூட்டு பணம் ரூபாய் **30,000/-**த்தை வெங்கடகிருஷ்ணனின் நண்பர் திரு.G.பிரபு என்பரின் SBI வங்கி கணக்கு எண் 20388959056 என்ற எண்ணிற்கு Deposit செய்ததற்கான(TXN No.2449) ரசீது, **2)**பணம் ரூபாய் 14,000/-த்துடன் பணக்குறிப்புகள் எழுதப்பட்ட 7 துண்டு காகிதங்கள், **3)**நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக வருகை பதிவேடு 2021, **4)**நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக பணக்கையிருப்புப் பதிவேடு 2021, **5)**நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக Movement Register, **6)** நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக DL Dispatch Register, **7)**நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக வெளிநபர் அலுவலகத்திற்கு வருகைப்புரியும் விபரப்பதிவேடு ஆகிய **7** ஆவணங்கள் இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது வட்டார போக்குவரத்து அலுவலரிடம் இன்றைய தினம் செய்யப்பட்ட பணிகள் குறித்து கேட்டபோது, LLR வழங்குதல், DL Test பார்த்தல், புதியபதிவு, தகுதிச்சான்று புதுப்பித்தல், Driving License Renewal செய்தது ஆகிய பணிகள் அனைத்தும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் செய்யப்பட்டது என்றும், அனைத்துவிதமான Permit-3, NOC-2, Badge-6, NAN.V-1, Transfer Owner-12, Temporary Permit-10, H.P. Form 34 & 35 -16 அகிய பணிகளை தான் செய்ததாகவும் தெரிவித்தார். திடீர் ஆய்வின்போது தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் 1)திரு.K.வெங்கடகிருஷ்ணன், வயது.59/2021, த/பெ.கண்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் மற்றும் 2)திரு.S.மூர்த்தி, வயது.42/2021, த/பெ.சட்டையப்பன், அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர், வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று **29.10.2021** ஆம் தேதி இரவு **23.30** மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. **பணிந்து சமர்பிக்கப்படுகிறது.** இன்று 30.10.2021 ஆம் தேதி காலை 03.00 மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.11/2021, U/s. 102 Cr.P.C and U/s. 7 and 7-A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

30.10.2021

(G.RAMESH KUMAR),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள், எதிரிகள் 1)திரு.K.வெங்கடகிருஷ்ணன், வயது.59/2021, த/பெ.கண்ணன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் மற்றும் 2)திரு.S.மூர்த்தி, வயது.42/2021, த/பெ.சட்டையப்பன், அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர்(பொறுப்பு), வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(G.RAMESH KUMAR), 30.10.2021
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்